வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 4.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஒலிம்பிக் போட்டிகளை வரும் 2036-ஆம் ஆண்டு இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, இன்று திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

உலக பிரெயில் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் 31-ஆவது சர்வதேச யோகா திருவிழா இன்று மாலை தொடங்கி வரும் 7-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

*பிரதமர்*

ஒலிம்பிக் போட்டிகளை வரும் 2036-ஆம் ஆண்டு இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெறும் நாட்டின் முதலாவது மிகப் பெரிய வாலிபால் சேம்பியன் போட்டிகளை புதுடெல்லியில் இருந்து இன்று காணொளி வாயிலாக தொடக்கி வைத்துப் பேசிய அவர் விளையாட்டுத் துறையில் நாட்டின் செயல் திறன் படிப்படியாக மேம்பட்டு வருவதாக கூறினார். ஒருங்கிணைப்பு, நம்பிக்கை, மற்றும் போட்டிகளை எதிர்கொள்வதற்கான தயார் நிலையின் அடிப்படையில் வெற்றி நிர்ணயிக்கப்படுவதாக தெரிவித்த பிரதமர் 24-ஆவது காமன்வெல்த் போட்டிகள் வரும் 2030-ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற உள்ளதை சுட்டிக் காட்டினார். நாடு முழுவதிலும் இருந்து 58 அணிகள் பங்கேற்பது ஒரே பாரதம் உன்னத பாரதம் என்பதை எதிரொலிப்பதாக குறிப்பிட்டார். கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா விளையாட்டுத் துறையில் பெரும் முன்னேற்றத்தை கண்டு வருவதாக கூறினார். விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் சீர்திருத்தங்களுடன் கூடிய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக

பிரதமர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வரும் 11-ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டிகளில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்-வீராங்கனைகள் இதில் பங்கேற்க உள்ளனர்.

*அமித் ஷா*

பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று திருச்சி வந்தடைந்தார். திருச்சி விமான நிலையத்தில் கட்சித் தலைவர்களும், மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோரும் அவரை உற்சாகமாக வரவேற்றனர். புதுக்கோட்டையில் மாநில பிஜேபி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரச்சார இயக்கத்தின் நிறைவு விழாவில் அவர் உரையாற்றுகிறார். தொடர்ந்து ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வழிபாடு செய்து திருச்சி மன்னார்புரம் பகுதியில் பிஜேபி சார்பில் நடைபெறும் பொங்கல் விழாவிலும் அவர் கலந்து கொள்கிறார்.

*சிவராஜ் சிங் சவ்கான்*

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம், கிராமப்புற தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் முந்தைய மகாத்மாகாந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாக குற்றம் சாட்டினார். தொழிலாளர்களும் புறக்கணிக்கப்பட்டதாக கூறிய அவர் இந்த திட்டத்தால் கிராமப் புறங்களில் நீண்கால வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டார். மத்திய அரசின் தற்போதைய திட்டம் குறித்து காங்கிரஸ் கட்சி மக்களை தவறாக வழி நடத்துவதாக குற்றம் சாட்டிய திரு சிவராஜ் சிங் சவ்கான் புதிய திட்டத்தை வேலை நாட்களின் எண்ணிக்கை மற்றும் ஊதியம் அதிகரிக்கப்பட்டு இருப்பதாக சுட்டிக்காட்டினார். கிராமப்புற மக்கள் தங்களின்

கிராமத்தின் வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கவும் இதில் வகை செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

*வரி சீர்திருத்தம்*

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக 2025-ஆம் ஆண்டு மேம்பட்ட நிலையில் சிறந்த தலைவராக பிரதமர் திரு நரேந்திர மோடியை உலகம் கண்ணோக்கியது குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு..

இந்தியாவின் தீர்க்கமான பொருளாதார தலைமை தாங்கி உலக அளவில் நம்பிக்கைகு உரிய ஜனநாயக தலைவராக பிரதமர் திரு நரேந்திர மோடி திகழ்கிறார். அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கைகளின் போதும், வல்லரசுகளின் அழுத்தங்களால் நாட்டின் நலனுக்கு எதிரான வர்த்தக ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படாது என்ற பிரதமரின் நிலைப்பாடு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. சரக்கு சேவை வரி கட்டமைப்பை வலுப்படுத்தியது, 4 புதிய தொழிலாளர் நலச் சட்டங்கள் உள்ளிட்டவை இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை 8.2 சதவிகிதம் என்ற உச்சத்திற்கு கொண்டு சென்றது. தேசப் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை என்ற அடிப்படையில் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் எதிரொலியாக ஆபரேஷன் சிந்தூர் பிரதமரின் உறுதியான நிலைப்பாட்டை பறைசாற்றியது. தேச நலன் மட்டுமல்லாமல் உலகளாவிய நல்லிணக்கத்தின் அடிப்படையிலான திரு நரேந்திர மோடியின் செயல்பாடுகள் பார்படாஸ், மொரீஷியஸ், எத்தியோப்பியா, ஓமன் உள்ளிட்ட 29 நாடுகளின் உயர் அங்கீகார கவுரப் பட்டங்களை அவருக்கு பெற்று தந்தது. ஐரோப்பிய தடையற்ற வர்த்தக அமைப்பு மற்றும் நியுசிலாந்து உடனான ஒப்பந்தங்கள், 18 நாடுகளின் நாடாளுமன்றங்களில் உரையாற்றிய பெருமை தெற்கு நோக்கிய கொள்கை உள்ளிட்டவற்றுடன் வருங்காலத்தை வடிவமைப்பதில் உலக அளவில் மிகப் பெரும் சக்தியாக பிரதமர் திரு நரேந்திர மோடி திகழ்வது நாட்டிற்கான பெருமையாகும்.

*ராணுவ தலைமை தளபதி*

ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி அரசு முறைப் பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ளார். வரும் 6-ஆம் தேதி வரை அந்நாட்டில் பயணம் செய்யும் அவர் இருநாடுகளுக்கும் பயன் அளிக்க கூடிய வகையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். தொடர்ந்து இலங்கைக்கு செல்லும் அவர் அங்குள்ள ராணுவ தளபதி உட்பட மூத்த ராணுவ தலைவர்களுடன் உரையாடுகிறார். இந்திய வீரர்களின் உயர்ந்த தியாகத்தை கவுரவிக்கும் வகையில் அமைந்துள்ள IPKF போர் நினைவு சின்னத்தில் அவர் அஞ்சலி செலுத்த உள்ளார்.

*வெனிசுலா*

வெனிசுலாவில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று, மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளால் வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள பதற்றங்களைத் தொடர்ந்து அந்நாட்டிற்கான பயணங்களை தவிர்க்குமாறு இந்தியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நிலமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், caracas-ல் இந்திய தூதரகத்துடன் தொடர்பில் உள்ளதாகவும் அமைச்சகம் கூறி உள்ளது. இதனிடையே, வெனிசுலா அதிபர் சிறைபிடிக்கப்பட்டதற்கு ரஷ்யா, சீனா, பிரேசில், கியூபா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. அந்நாட்டின் இடைக்கால அதிபராக தற்போதைய துணை அதிபர் Delcy Rodriguez நியமிக்கப் பட்டுள்ளார். வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களால் தொலை தொடர்பு மற்றும் இணையதள சேவைகள் பாதிக்காத வகையில் அடுத்த மாதம் 3-ஆம் தேதி வரை அந்நாட்டு மக்களுக்கு ஸ்டார்லிங்க் நிறுவனத்தால் இலவச இணையதள சேவைகள் வழங்கப்படும் என்று டெஸ்லா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

*ஜிதேந்திர சிங்*

ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க நிதியை பெறுவதற்கு ஒரு ஸ்டார்ட்-அப் நிறுவனம் 3 ஆண்டுகள் செயல்பட வேண்டும் என்ற நிபந்தனையை அரசாங்கம் நீக்கி உள்ளது. புதுடெல்லியில் நடைபெற்ற

அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி அமைச்சகத்தின் 41-ஆவது நிறுவன தின நிகழ்வில் உரையாற்றிய மத்திய இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சுயமாக தொடங்கும் எந்த ஒரு புதிய ஸ்டார்ட்-அப் நிறுவனமும் இத்துறையின் மூலம் நிதியைப் பெறலாம் என அறிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் அணுசக்தி மற்றும் விண்வெளித் துறையை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவது உட்பட பல புரட்சிகரமான முடிவுகளை அரசாங்கம் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். பிரதமரின் ஆத்ம நிர்பர் பாரத் தொலைநோக்கு பார்வையை இந்தியா உணர்ந்து வருவது மட்டுமல்லாமல் மற்ற நாடுகள் அதிக அளவில் நம்பி இருக்கும் நாடாகவும் வளர்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

*பிரெயில் தினம்*

உலக பிரெயில் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. பார்வையற்றவர்கள் தங்கள் விரல் நுனிகளால் 6 புடைப்பு புள்ளிகளைக் கொண்ட ஒரு அமைப்பை பயன்படுத்தி படிக்க உதவும் இந்த பிரெயில் குறியீடை கண்டுபிடித்த லூயிஸ் பிரெயிலை கொண்டாடும் விதமாக இந்நாள் அமைகிறது. இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு..............

1809 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் தேதி பிறந்த லூயிஸ் பிரெயில் என்ற பிரெஞ்சு சிறுவனால் 1824 ஆம் ஆண்டில் பிரெயில் உருவாக்கப்பட்டது. இன்று, பிரெயில் உலகம் முழுவதும் பல மொழிகளில் பயன்படுத்தப்படுகிறது. ஆயிரக்கணக்கான பார்வையற்ற மக்கள், வாங்கும் பொருட்களின் பட்டியல் தயாரிப்பது முதல் நாவல்கள் படிப்பது, கணிதச் சிக்கல்கள் மற்றும் அறிவியல் சமன்பாடுகளைத் தீர்ப்பது, அத்துடன் இசை கற்பது வரை அனைத்திற்கும் பிரெயிலைப் பயன்படுத்துகின்றனர். இந்த நாளை நினைவுகூரும் வகையில், தேசிய பார்வையற்றோர் கூட்டமைப்பு புது டெல்லியில் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. பார்வையற்ற மக்களை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு சமத்துவ உரிமை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை வழங்குவதற்கும், 'அதிக பிரெயில், அதிக அதிகாரம்' என்ற கூட்டு பிரெயில் பிரச்சாரத்தையும் இந்த கூட்டமைப்பு தொடங்கியது. ஊடகங்களிடம் பேசிய தேசிய பார்வையற்றோர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.கே. ரூங்டா, சமூகத்தில் பார்வையற்றவர்களை இணைக்க பிரெயில் உதவுவதாகக் கூறினார்.

பார்வையற்றவர்களுக்கு பிரெயிலின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்த அவர் பிரெயில் உருவாக்கப்பட்டு சுமார் இருநூறு ஆண்டுகள் ஆகிவிட்டதாக தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் அட்டர்னி ஜெனரல் ஆர். வெங்கட்ரமணி கலந்து கொண்டு உரையாற்றினார். அதில் அவர் பிரெயில், சமத்துவம், கல்விக்கான அணுகல், நீதி மற்றும் சமூகத்தில் பார்வையற்றவர்களின் முழுமையான பங்கேற்பை உறுதி செய்கிறது என்று கூறினார்.

*புதுச்சேரி-யோகா*

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் 31-ஆவது சர்வதேச யோகா திருவிழா இன்று மாலை தொடங்கி வரும் 7-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இன்று கடற்கரை சாலை காந்தி திடலில் நடைபெறும் விழாவில் துணை நிலை ஆளுநர் திருகைலாஷ்நாதன் இவ்விழாவினை தொடக்கி வைக்கிறார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு செல்வ கணபதி, திரு வைத்திலிங்கம், தலைமை செயலர் திரு சரத் சவ்கான், அரசு செயலர் திரு மணிகண்டன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். சர்வதேச யோகா திருவிழாவில் பல்வேறு நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் யோகா நிபுணர்கள் கலந்து கொள்கின்றனர். இன்று மாலை ட்ரோன் ஷோ மற்றும் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

*லடாக்*

லடாக் யூனியன் பிரதேசத்தில் அரசு வேலை வாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு 4 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று யூனியன் பிரதேச நிர்வாகம் அறிவித்துள்ளது. லே-யில் துணை நிலை ஆளுநர் திரு கவின்தர் குப்தா வெளியிட்ட லடாக் விளையாட்டுக் கொள்கையில் இந்த யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கல்வி உதவித் தொகை, விருதுகள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் லடாக்கிற்கென விளையாட்டு கவுன்சில் ஒன்றை உருவாக்கி கட்டமைப்பு வசதி மற்றும் பயிற்சிகள் உள்ளிட்ட பணிகளை விளையாட்டு சங்கங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

படகு சாம்பியன்

சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன் போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகிறது. வரும் 10-ஆம் தேதி வரை சென்னை துறைமுக வளாகத்தில் நடைபெறும் இப்போட்டியில் 13 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் பங்கேற்கின்றனர். Wind surfing, skiff உள்ளிட்ட 5 பிரிவுகளில் இப்போட்டி நடைபெறும்.

கிரிக்கெட்

19-வயதிற்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் நேற்று மாலை Benoni-யில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது இளையோர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 25 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணியை வென்றது. 302 ரன் என்ற இலக்குடன் விளையாடிய தென்னாப்பிரிக்க அணி 27.4 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 148 ரன் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் DLS முறையில் இந்தியா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வானிலை

தென் கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வங்க கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகம். புதுச்சேரி-காரைக்கால் ஆகிய பகுதிகளில் இன்று முதல் வரும் 10-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளை வரும் 2036-ஆம் ஆண்டு இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பாஜக மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, இன்று திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

உலக பிரெயில் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரியில் சுற்றுலாத் துறை சார்பில் 31-ஆவது சர்வதேச யோகா திருவிழா இன்று மாலை தொடங்கி வரும் 7-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.